www.padippakam.com

இதழ் - 12

டிசம்பர் 2000

விலை : ரூ.5-00

# உறவு

மார்க்சிய தத்துவ இதழ்

தாஸ்னா

பதிவு :

230 / 18 / 99

✦ தேசிய முதலாளிகள் எங்கே இருக்கிறார்கள்?

✦ கடிதங்கள்

- கருத்துப் போராட்டம் தேவையா?
- பாட்டாளி வர்க்கம் இருக்கிறதா?

✦ உறவு மாநாட்டு குறிப்புகள்

இணையத்தில் படிக்க : www.geocities.com/marxiauravu

படிப்பகம்

www.padippakam.com



*வாசகர் தோழர்களே!*

உறவு 12-ம் இதழ் உங்கள் கையில்... மார்க்சிய சிந்தனையாளர் மாநாட்டு நிகழ்ச்சி நிரலைத் தாங்கி வெளி வர வேண்டும் எனத்திட்டமிட்டோம். ஆனால் சில தவிர்க்க இயலாத காரணங்களால் மாநாடு நிகழ்வுறும் நாள் கால தாமதமாகிறது; எனவே நிகழ்ச்சி நிரல் இல்லாமலே இதழ் வெளி வருகிறது. என்ற போதிலும் மாநாட்டிற்கு முன்பாகவே மற்றொரு இதழும் வரும்.

தோழர்களே! மாநாட்டுப் பணி திட்டமிட்டபடி நடந்தேறி வருகிறது.

தங்களது பங்களிப்பைக் கருத்தாலும், கரத்தாலும் நிதியாலும் உறவு மாநாட்டுக்கு உதவ வேண்டுகிறோம்.

உறவுக்கு சந்தாவும் நன்கொடையும்கூட அனுப்பி உதவுங்கள்; உறவு தொடர்ந்து வர உதவுங்கள். அடுத்தவருக்கும் அறிமுகப் படுத்துங்கள். விமர்சனங்கள், கருத்துக்களை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

தோழமையுடன்,

**ஆசிரியர்.**

**உறவுக்கு உதவியவர்கள் :**

1. **பேரா. சே. கோச்சடை,** காரைக்குடி. 300/-
2. முனைவர். **சே. சுப்பிரமணியன்** (விஞ்ஞானி) காரைக்குடி. 100/-
3. தோழர். **வெங்கடசுப்பிரமணியன்** தபால்துறை ஊழியர், காரைக்குடி. 100/-
4. மருத்துவர். **த.ச. இராசா்மணி** மதுரை. 200/-
5. பேரா. **ராஜ முருகுபாண்டியன்** 100/-
6. தோழர். **எஸ். கணேசமூர்த்தி** அமெரிக்க டாலர், ஜெர்மனி 20/-
7. தோழர். **மு. சொக்கலிங்கம்** காரைக்குடி 100/-

**தொடர்புக்கு :**

**கா.சே. பாலசுப்பிரமணியன்,**

6/5, கீழக்கொரட்டியார் தெரு, காரைக்குடி - 630 001.

தொலைபேசி : 04565 - 436765.

மின்அஞ்சல் : uravu @ rediffmail. Com

படிப்பகம்

www.padippakam.com



# தேசிய முதலாளிகள் இருக்கிறார்களா!

இந்திய தமிழகச் சூழலில், சமுதாய மாற்றம் - புரட்சியை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அமைப்புக்கள் பெரும்பாலும் தமது இலட்சியம் புதிய சனநாயகப் புரட்சி என்றே கூறி வருகின்றனர்.

நாம் புதிய சனநாயகப்புரட்சி என்பது சாத்தியம் இல்லை; சோசலிசப்புரட்சியே சாத்தியம் என்று உறவு இதழில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளோம். மேலும் புதிய சனநாயகப் புரட்சி சாத்தியம் என்பது தேசிய முதலாளிகள் இருக்கிறார்கள்; அவர்கள் அப்புரட்சியில் முக்கியப் பங்கு வகிக்க கூடும் என்பதையும் உள்ளியல்பாக கொண்டுள்ளது. நாம் உறவு இதழில் போகிற போக்கிலே தான் தேசிய முதலாளிகள் இல்லை என்பதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறி வந்து இருக்கிறோம். ஆனால் திட்டவட்டமாக தெளிவாக கூறச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. எனவே தான் அது குறித்துத் தெளிவாகக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதே நேரத்தில் நாம் புதிய சனநாயகப்புரட்சி சாத்தியம் இல்லை என்பது குறித்து தமிழக அளவில் இயங்கும் அமைப்புக்கள், இந்திய அளவில் புதிய சனநாயகப் புரட்சி நோக்கிச் செயல்பட்டாலும் அல்லது தமிழகப் புதிய சனநாயகப் புரட்சி நோக்கி செயல்பட்டாலும் - விமர்சனம் எதுவும் முன்வைத்து விடவில்லை. மௌனம் காத்தே வருகின்றனர். அவர்களது மௌனம் விரைவில் உடையும் என்றே கருதுகிறோம்.

புதிய சனநாயகப் புரட்சி மற்றும் தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது என்பது பற்றிய நமது கருத்து இந்திய - தமிழகச் சூழலுக்கு மட்டுமல்லாமல் மூன்றாம் உலக நாடுகள் அனைத்துக்குமே பொருந்தக்கூடிய ஒன்றாகும்.

புதிய சனநாயகப்புரட்சி சாத்தியம் இல்லை என்பதற்கு முன்பாக 'புதிய ஜனநாயகப் புரட்சி' என்பதன் பொருள் என்ன என்று பார்ப்போம். பின்னர் தேசிய முதலாளி வர்க்கம் இருப்பு குறித்து காண முயல்வோம்.

பொதுவாக நிலவுடைமைச் சமுதாயத்தின் சுயதேவைக்கான உற்பத்திமுறை படிப்படியாக அழிந்து சந்தைக்கான உற்பத்தி முறையாகப் பரிணமிக்கிறது. இதன் உடன்நிகழ்வாக நிலவுடைமைச் சமுதாயத்தின் இடைநிலை வர்க்கமான வணிக வர்க்கம் முதலாளி வர்க்கமாகப் பரிணமிக்கிறது. நிலவுடைமை உற்பத்திமுறை எந்தளவிற்கு அழிகிறதோ அந்த அளவிற்கு முதலாளிய வர்க்கம் வளர்ச்சி பெறுகிறது. நாட்டின் தேசத்தின் தலைமையான வர்க்கமாக அதிகாரம் செலுத்தும் வர்க்கமாக வளர்கிறது. இதையே ஐரோப்பாவின் முதலாளி வர்க்க வரலாறாகக் காண்கிறோம்.

இந்நிகழ்முறை மனித சமுதாய வரலாற்றிலேயே முற்போக்கானது; ஏனென்றால் மனித சமுதாய வரலாற்றில் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் வர்க்க பேதங்கள் - சாதி பேதங்களும் உட்பட உருவானதற்கான காரணங்கள் தெளிவாகத் தெரிகிறது; அறியவும் முடிகிறது. எனவே இந்த சாதி - வர்க்க பேதங்களையும், சாதி - வர்க்க தனிச்சலுகைகளையும் ஒழிப்பதற்கான சாத்தியப்பாட்டையும் இக்கட்டமே வழங்குகிறது. அதாவது முதலாளிய சமுதாயத்தின் நேரடி விளைபொருளாய் இருப்பது பாட்டாளி வர்க்கமே ஆகும். மற்றைய வர்க்கங்கள் எல்லாம் அழிந்து விடுகின்றன. இதன் மூலம் பாட்டாளி வர்க்கம் தனக்கான விடுதலைக்காக மட்டுமல்லாது ஒட்டு மொத்த மனிதசமுதாய விடுதலைக்காகவும் போராடும் வர்க்கமாகிறது என முதலாளிய சமுதாயத்தை ஆராய்ச்சி செய்த மார்க்சும் எங்கெல்சும் வர்ணித்தனர். பாட்டாளி வர்க்க வளர்ச்சிக்கும் அதன் வர்க்க ஒற்றுமைக்கும் முன்னுரிமை கொடுக்க

படிப்பகம்

www.padippakam.com



மேலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது முதலாளித்துவ வளர்ச்சி எட்டிப்பிடித்த நாடுகளில் மட்டுமே சாத்தியம். அதுவும் கூட பாட்டாளி வர்க்கப்புரட்சி என்பது ஓரிரு முதலாளிய நாடுகளில் மட்டுமே என்று இல்லாமல் முதலாளிய வளர்ச்சியை எட்டிப்பிடித்த நாடுகளில் ஏககாலத்தில் சாத்தியமாகும் என்றனர், மார்க்சும் எங்கெல்சும்.

ஆனால் மார்க்சும் எங்செல்சும் காட்டிய திசைவழியானது தனக்குத் தீங்கானது எனக் கண்டு முதலாளித்துவ வர்க்கம் தன்னைப் புதிய வழியில் தகவமைத்துக் கொண்டது. அது மார்க்சும் எங்கெல்சும் புகழ்பெற்ற அறிக்கையில் சுட்டிக் காட்டியதையே ஞாபகப்படுத்துகிறது. அதாவது முதலாளிய வர்க்கம் தனது சுயநலன் பொருட்டு எடுக்கும் எந்த நடவடிக்கையும் ஒரு நெருக்கடியிலிருந்து தப்பிக்க அதனிலும் சிக்கலான மோசமான நெருக்கடியில் சிக்கிக் கொள்கிறது.

இதையே லெனின் ஏகாதிபத்தியம் அல்லது ஏகபோக முதலாளியம் எனக் குறிப்பிட்டார். மார்க்சும் எங்கெல்சும் கூறியது போன்று சமுதாயப்புரட்சி சாத்தியம் இல்லை. அதாவது முதலாளியம் வளர்ச்சி பெற்ற நாட்டில் தான் என்பது இல்லாமல் அவ்வளர்ச்சியை நோக்கிய நாட்டிலும் கூட சாத்தியம். இன்னும் சொன்னால் ஏகாதிபத்தியத்தின் பலவீனமான கண்ணியில் தான் சாத்தியம். அதுவும் மார்க்சும் எங்கெல்சும் கூறியது போன்று ஏககாலத்தில் மற்ற நாடுகளில் அப்புரட்சி நடைபெற வேண்டும் என்ற அவசியம் இல்லை; தனிநாட்டில் கூடப் புரட்சி சாத்தியம் என்றார். அதன்படி லெனின் ரஷ்யப்புரட்சியை நடத்தியும் காட்டினார்.

ரஷ்யப் புரட்சியானது உலகெங்கும் மக்கள் மத்தியில் வெகுசன எழுச்சியை ஊட்டியது. தேசவிடுதலை மற்றும் பொதுவுடைமைவாதிகளின் தலைமையிலான பாட்டாளி வர்க்கப்புரட்சிக்கும் கூட ஒரு விதத்தில் தூண்டு விசையானது. ஆகவே தான் ரஷ்யப்புரட்சியைத் தொடர்ந்து சீனாவிலும் மாவோ தலைமையில் புரட்சி ஏற்பட்டது.

சீனப்புரட்சியானது ரஷ்யப் புரட்சியிலிருந்து வேறுபட்டது. அதாவது ரஷ்யாவை விட சீனாவில் முதலாளிய வளர்ச்சி என்பது மிகவும் பின்தங்கியதாக இருந்தது. பாட்டாளி வர்க்கம் என்பது கூட எண்ணிக்கையில் மிகக்குறைவாகவே இருந்தது. எனவே தான் சீனப்புரட்சி என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியல்ல; மாறாக புதிய சனநாயகப்புரட்சி என அழைக்க நேரிட்டது. இது குறித்து விளக்குவோம்.

உலகில் முதலாளியம் ஐரோப்பாவில் முதன்மையாகத் தோன்றியது. எனவே அந்நாடுகளில் தோன்றிய முதலாளி வர்க்கம் தனது உற்பத்திப் பொருளுக்கான சந்தை வேண்டி உலகெங்கும் செல்லவேண்டி நேரிட்டது. இதன்விளைவாக உலகில் (குடியேற்றங்கள்) தோன்றின. ஐரோப்பிய முதலாளி வர்க்கத்திற்குக் குடியேற்றமாக இருப்பது ஒன்றுதான் சந்தையை நிரந்தரமாக உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கான வழி முறையாகும்.

குடியேற்ற நாடுகளைப் பிடிப்பதற்கான போராட்டம் ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தினரிடையே கூடப் போட்டியை ஏற்படுத்தியது. பல்வேறு அணிகளை ஏற்படுத்தியது. இதை இந்தியச் சூழலில் தெளிவாகவே காணலாம்.

மேலும், ஐரோப்பிய முதலாளி வர்க்கத்திற்குக் குடியேற்ற நாட்டு ஆளும் வர்க்கத்துடன் மோதி வெற்றி பெறுவதன்மூலம் தான் தனது மேலாண்மையை நிறுவ வேண்டி இருந்தது. இதன் காரணமாகக் குடியேற்ற நாட்டு ஆளும் வர்க்கமான நிலவுடைமை வர்க்கம் ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தை எதிர்க்க முடியாமல் அழிந்தது அல்லது அதற்கு கீழ் அடங்கிய வர்க்கப்பிரிவாகியது.

www.padippakam.com



(ஐரோப்பிய) முதலாளி வர்க்கம் எந்த நிலவுடைமை வர்க்கத்தை எதிர்த்து அழித்து தனது ஆளுமையை நிறுவியதோ, அதற்கு எதிராக தனது வர்க்க வாழ்நிலையின் பொருட்டு (அதுவே) காலனி நாட்டு நிலவுடைமை வர்க்கத்தைப் பாதுகாக்கின்ற நிலைமை ஏற்பட்டதும் எதார்த்தமானதே. இது ஒருபொருளின் வளர்ச்சிக்கு எந்தக் கூறு பிரதான்மாக இருக்கிறதோ அதுவே கால வளர்ச்சியில் முதிர்ச்சியடைந்து - எதிரான அம்சமாக மாறிவிடுகிறது; என்ற இயங்கியல் - தர்க்க விதியை நிரூபிப்பதும் ஆகிறது.

குடியேற்ற நாடுகளில் நிலவுடைமைச் சமுதாயத்தின் இடைநிலை வர்க்கமான வணிக வர்க்கத்திற்கும் கூட ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தின் நடவடிக்கை எதிராக அமைந்தது. ஆனால் ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தின் முன் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் குடியேற்ற நாட்டு முதலாளி வர்க்கம் எதிர்த்துத் தனது மேலாண்மையை நிறுவ முடியாமல் அடிபணிந்தது. அதாவது தனது வாழ்வும் வளர்ச்சியும் ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தின் நலனுடன் இணைந்த ஒன்றாகிறது. அவர்களே தரகு முதலாளி வர்க்கம் என அழைக்கப்படுகின்றனர்.

ஐரோப்பிய முதலாளியம் வளர்ச்சி பெற்று ஏகாதிபத்தியமாக மாறியது; இதன் உடன் நிகழ்வாகவே குடியேற்ற நாட்டு முதலாளி வர்க்கமும் நிலவுடைமை வர்க்கமும் கூட புரட்சிகரமற்ற தன்மையை கொண்டதாகிறது.

இத்தகைய சூழலைக் கணக்கில் கொண்ட சீனாவின் மாவோ புதிய திசைவழியைக் கண்டார். அதுவே புதிய ஜனநாயகம் எனப்படுகிறது.

சீனச்சமூகத்தில் வளர்ந்து வரும் பாட்டாளி வர்க்கத்திற்கு ஏகாதிபத்தியங்களும் - ஏகபோக முதலாளிய வர்க்கத்தினரும், நிலவுடைமை வர்க்கத்தினரும் தரகு முதலாளி வர்க்கத்தினரும் எதிரிகளாவர். பாட்டாளி வர்க்கத்திற்கு சிறு விவசாயிகள் (ஏழை, நடுத்தர, கூலி விவசாயிகள்) மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குணாம்சம் கொண்ட முதலாளி வர்க்கத்தினர் (தேசிய முதலாளிகள்) நட்புச் சக்திகளாவர்.

மேற்படி எதிரிவர்க்கங்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி அமைக்கும் அரசியல் அதிகாரமே புதிய ஜனநாயகம் ஆகும் இது பாட்டாளிகள் மற்றும் விவசாயிகளின் கூட்டுச் சர்வாதிகாரமும் ஆகும். இதன் விளைவாக முதலாளியக் கட்டம் அடையாமலே படிப்படியாக சோசலிசம் மற்றும் பொதுவுடைமை (கம்யூனிசம்) நோக்கிச் செல்வதற்கான பாதையும் ஆகும்.

ஒரு விதத்தில் புதிய சனநாயகம் என்பது ஒருநாட்டின் தேசத்தின் (குடியேற்றம்) முதலாளி வர்க்கம் வரலாற்றில் தனது கடமையை செய்யமுடியாமல் விட்டுப் போனதன் தொடர்ச்சியாக பாட்டாளி வர்க்கமே முன் எடுக்கும் நடவடிக்கையும் ஆகும்.

வரலாறு மாவோவின் திசைவழி சரிஎன காட்டிவிட்டது. அதுவே இந்திய - தமிழகச் சூழலுக்கு பொருந்துமா? பொருந்தும் எனில் மா-லெ இயகக பின்னடைவிற்கு காரணம் என்ன? எனவும் நாம் காண வேண்டியுள்ளது.

1947-க்கு முன்னும் சரி அதற்கு பின்னரும் சரி சீனநிலைமை தான் இந்திய தமிழகச் சூழலில் நிலவுகிறது என்பது விவாதத்திற்குரியது; ஆழ்ந்து பரிசீலிககத் தக்கது; ஒப்பிடத்தக்கது.

சீனாவில் பொதுவுடைமைக் கட்சி ஆட்சியை கைப்பற்றும் வரை பெரும பகுதி நிலவுடைமை வர்க்கத்தின் மேலாட்சி இருந்தது. ஏகாதிபத்தியங்களின் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் நேரடியான மேலாட்சியும் கூட இருந்தது. இன்னும் சில பகுதிகளில் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் மேலாட்சிக்கு கீழ்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



நிலவுடைமை வர்க்க மேலாட்சியும், தரகு முதலாளி வர்க்கத் தோற்றமும் கூட இருந்தது. ஆகவே தான் மாவோ, *சீனா*, (குடியேற்ற, அரைக்குடியேற்ற) அரை நிலப்பிரபுத்துவ நாடு என வரையறுக்க நேர்ந்தது.

இந்தியாவோ 1850-களுக்கு முன்பே இன்னும் சொல்லப்போனால் முதலாளியம் ஏகபோக முதலாளியமாக மாறும் முன்னரே அதாவது தொழிற்துறை முதலாளியம் ஐரோப்பாவில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் முன்னரே குடியேற்றமாக - முழுமையாக - மாறிவிட்டது. இது இந்தியாவிற்கும் *சீனா*விற்கும் இடையேயான பருண்மையான வேறுபாடாகும்.

இந்திய நிலவுடைமை உற்பத்தி குடியேற்ற ஆதிக்க சகாப்தத்தில் அப்படியே பாதுகாக்கப்படவில்லை. ஐரோப்பிய முதலாளி வர்க்கம் தனது நலனுக்கு கீழ்பட்டு நடக்கும் உற்பத்தி முறையாக் மாற்றவேண்டி இருந்தது. இதற்குக் காரணம் இந்திய அரசர்களை உடைமை நீக்கம் செய்தால் அதிகப்படியான, வரி - லாபம் கிடைக்கும் என பிரிட்டானியர் கருதினர். அதையே டல்ஹவுசி, வெல்லெஸ்லியின் திட்டங்கள் நிறைவேற்றின. இத்திட்டங்கள் எதிர்பார்த்தபடி லாபம் தந்தது. ஆனால் சிப்பாய்கள், நெசவாளர், விவசாயிகள் போராட்டம் வீறு கொண்டு எழுந்தது. இந்தப் போராட்டங்களை தடுக்கவே புதிய இடைநிலை வர்க்கங்கள் தேவைப்பட்டன. அதை நிறைவேற்றும் முயற்சியாகவே பிரிட்டானியரால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜமீன்தாரி, ரயத்வாரி, மஹல்வாரி முறை அமைந்தன. இது இந்திய நிலவுடைமையைத் தனக்குச் சாதகமாக மாற்றியதன் வடிவமும் ஆகும். இதையே மார்க்சும் எங்கெல்சும் இந்தியாவைப் பற்றிய கட்டுரையில் எழுதினர். "ஆசிய பாணி உற்பத்திமுறைக்கு சமீன்தாரி, ரயத்வாரி, மஹல்வாரி முறை அவசர அவசியத் தேவை" என எழுத நேர்ந்தது.

இத்தகைய நிலவுடைமை உற்பத்தியிலான மாற்றம் *சீனா*வில் நடைபெறவே இல்லை. அதற்கான சமுதாய அவசியம் எழும்முன்பே பொதுவுடைமைவாதிகளின் தலைமையிலான புரட்சியை நோக்கி அச்சமூகம் தள்ளப்பட்டது; அதில் வெற்றியும் பெற்றது.

இந்தியச் சூழலில் ஏற்பட்ட நிலவுடைமை உற்பத்திமுறையிலான மாற்றம் கணக்கில் கொள்ளப்படாமல் வெறுமனே *சீனா*வைப் போன்று நிலவுடைமை, நிலவுடைமை வர்க்கம் என்ற விளக்கம் பொருந்தாது. அதாவது அதைவிடக் கூடுதலான விபரங்கள் கணக்கில் கொள்ளப்படாததுமான பொருளையே இது தருவதாகிறது. அதாவது *சீனா*வில் முதலாளிய வளர்ச்சியை - முதலாளிய வர்க்கத்தை, தேசிய முதலாளி, முதலாளியம் (தேசிய முதலாளி வர்க்கம்) தரகு முதலாளியம் (தரகு முதலாளி வர்க்கம்) என பிரித்து வேறுபடுத்திக் காட்டியது போன்று நிலவுடைமை உற்பத்தியையும், நிலவுடைமை வர்க்கத்தையும் வேறுபடுத்த வேண்டி உள்ளது.

இங்கு ஒரு விசயம் மறந்துவிடலாகாது. அதாவது நிலவுடைமையாளர்களில் ஒருசிலர் விதிவிலக்காகக் கூட ஏகாதிபத்திய எதிர்ப்பு குணாம்சம் கொண்டவர்களாக இருந்தனர் என்று மாவோ காட்டினார். இந்தியச் சூழலில் 1850-க்கு பின்னர் அத்தகைய நிலவுடைமையாளர் இருந்தனரா என்றால் கேள்விக்கிடமற்ற வகையில் இல்லை என்றே சொல்லிவிடலாம். அதே நேரத்தில் 1850-க்கு முன்னர் ஏகாதிபத்திய எதிர்ப்பு குணாம்சம் கொண்டவர்கள் இருந்தனர். படிப்படியாக நடந்த எழுச்சிகளின், போராட்டங்களின், விளைவாகக் குறிப்பாக 1857-க்கு பின்னர் அத்தகைய நிலவுடைமை வர்க்கத்தினர் இல்லாது அழிக்கப்பட்டனர் அல்லது, ஏகபோக முதலாளி வர்க்கத்துக்கு கீழ்பட்ட வர்க்கத்தினராக வளர்க்கப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



எனவே 1850-க்கு பின்னரான ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தினரால் புனரமைக்கப்பட்ட நிலவுடைமை உற்பத்தியைத் தரகு நிலவுடைமை என்றும் தரகு நிலப்பிரபு வர்க்கம் என்று அழைப்பதே சரியாக இருக்கும்.

இந்தியச் சூழலில் நிலவுடைமை உற்பத்தியை சீனாவிலிருந்து வேறுபடுத்திக் காணமுயன்றவர் பம்பாய் பகுப்பாய்வுக் குழுவைச் சேர்ந்த ஜே.பி. தீட்சித் ஆவர். அவரும் கூட தரகு நிலவுடைமை என்பதற்கு அதிக அழுத்தம் கொடுக்கவில்லை; ஆனால் தரகு நிலவுடைமை வர்க்கம் என அழுத்தமாக குறிப்பிடுகிறார். இதை அவரது நூலான 'இந்திய வரலாறு புதிய பார்வை' தெளிவாகவே முன்வைக்கிறது. நாம் அவரது திறனாய்வை ஏற்கிறோம். மேலும் அதைவிட கூடுதலாக திறனாய்வை மேற்கொள்கிறோம். அதாவது இந்திய நிலவுடைமை 1850-க்கு பின்னர் தரகு நிலவுடைமை என்பதே சரியானது; தெளிவானது என்கிறோம்.

பெரும்பாலான மா-லெக்குழுக்கள் (ஒருசில தவிர) பம்பாய் பகுப்பாய்வுக் குழுவினர் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், அது பற்றி கருத்துச் சொல்வதை தவிர்த்தே வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக நிலவுடைமை உற்பத்திமுறை அழிந்து முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றும். அதே போல் நிலவுடைமைச் சமுதாயம் அழிந்து முதலாளிய சமுதாயம் பரிணமிக்கிறது. இது பெரும்பான்மையாக ஐரோப்பிய வரலாற்றுக்கு பொருந்தும். இது போன்று நிகழ்முறை (இயங்கு இயல்) - விளக்கம் இந்தியாவிற்குப் பொருந்தாது.

ஐரோப்பிய முதலாளி வர்க்கத்தின் மேலாண்மை காரணமாக குடியேற்ற (காலனி) நாட்டில் தரகு நிலவுடைமை, தோன்றியதன் மூலம் தரகுமுதலாளியமே வளர முடியும். தேசிய முதலாளியம் - **தேசிய முதலாளி வர்க்கம் உருவாக முடியாது; ஏன், அதற்கான பொருளாதார நிலைமையே இல்லை எனலாம்.**

இதற்கு மாறாக தேசிய முதலாளியமும் - தேசிய முதலாளி வர்க்கமும் உருவாக முடியும் என்பது இந்திய தமிழக எதார்த்த நிலைமையை கணக்கில் கொள்ளாமல் எடுக்கப்படும் முடிவாகும். இம்முடிவு கற்பனையானதும் எதார்த்தத்துக்கு பொருத்தமில்லாதது மட்டுமல்ல; இயங்கியல் மற்றும் தர்க்க பூர்வமாகவும் கூட விளக்க இயலாதது; முரண்பாடு உடைய கண்ணோட்டமும் ஆகும். மேலும் ஜே.பி. தீட்சித் கண்ணோட்டம் தரகு நிலப்பிரபுத்துவம் தரகு நிலவுடைமை வர்க்கம் என்ற திறனாய்வு மா-லெக் குழுக்களின் கண்ணோட்டத்திலிருந்து வளர்ச்சி பெற்றது. சரியானது; அதே நேரத்தில் தேசிய முதலாளியம் உருவாக முடியும் என்பதன் மூலம் மா-லெக் குழுக்களின் கண்ணோட்டத்திலிருந்து சராம்சமாக விடுபடவில்லை, என்பதையே காட்டுகிறது.

மேலும் மா-லெக்குழுக்கள் பெரும்பாலும் இந்திய தமிழகச் சூழலில் தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது என்ற போதிலும் அவ்வர்க்கத்தை - அதன் பிரதிநிதியான கட்சியை எடுப்பாக காட்டமுடியவில்லை. ஆனால் இருக்கிறது என்பதை எந்தவித நடைமுறை உதாரணம் இன்றி வெறும் கருத்தாகவே கூறிவருகின்றனர். இது சமுதாய வர்க்கங்களை அதன் எதார்த்த வாழ்நிலையிலிருந்து வரையனுப்பதற்குப் பதிலாக தமது முடிவான கருத்திலிருந்து எதார்த்த சமுதாய வர்க்கங்களின் வாழ்நிலையை வரையனுப்ப தன் தவிர்க்க இயலாத முடிவின் வெளிப்பாடாகும்.

தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது என்று அவர் வலியுறுத்திக் கூறியதன் மூலம் மா-லெக் குழுக்களை விட எதார்த்தமாகக் காட்டவேண்டிய கட்டாயத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com



ஜே.பி. தீட்சித் தள்ளப்பட்டார். ஆகவே தான் காங்கிரசில் மிதவாதிகளைத் தரகு முதலாளியப் பிரிவு என்னும் தீவிரவாதிகளை தேசியமுதலாளியப் பிரிவு என்று குறிப்பிட நேர்ந்தது. தேசிய முதலாளிய வர்க்கம் ஏன் சன்யாட்சன் தலைமையில் சீனாவில் போராடியது போன்று இந்தியாவில் போராடவில்லை என்ற காரணத்தை அறிய அவர் முயற்சிக்கவில்லை. மாவோ, உலகில் இனிமேல் தேசிய முதலாளி வர்க்கம் ஒரு வர்க்கமாக அணிதிரள்வது சாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டது கூடுதலாகவே இந்தியாவிற்கு பொருந்தும் அல்லவா? மேலும் நேதாஜி போன்றவர்கள் கூட பிரிட்டானியரை எதிர்க்க ஜெர்மானியருடன் கூட்டுச்சேர்ந்த காரணம் என்ன? அவர் அவ்வாறு சேர்ந்த சூழலில் எவ்வாறு ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக கருத முடியும்? தனது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏகாதிபத்தியத்தை சார்ந்து நிற்பவர் யாராயினும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக ஏன் தேசிய முதலாளி வர்க்கப் பிரிவாகக் கூட கருதஇயலாது. இதற்கெல்லாம் ஜே.பி. தீட்சித்திடம் தெளிவான பதில் இல்லை. இந்த முரணுள்ள கண்ணோட்டத்தின் வெளிப்பாடாகவே எதார்த்த சூழலில் தேசிய முதலாளி வர்க்கம் யார் என ஜே.பி. தீட்சித் எழுதுகிறார்.

"பாட்டாளி வர்க்கப் புரட்சியின் செயல் தந்திரத்தின் ஒரு முக்கிய அம்சம், பாசிசத்திற்கும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான ஒரு ஜனநாயக ஐக்கிய முன்னணியாகும். இந்த சனநாயக ஐக்கிய முன்னணியை, ஆர்.எஸ்.எஸ் ஜனசங்கம் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டி சீர்குலைக்கும் சதிச் செயல்களை மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்கள் அம்பலப்படுத்த வேண்டும். எதிர்க்க வேண்டும். சங்கமும் (ஆர்.எஸ்.எஸ்) சனசங்கமும் பெரும்பாலும் இந்திய தேசிய முதலாளியத்தின் ஒருபிரிவின் அமைப்புக்களே..." (பக்கம் - 34, இந்தியாவில் தேசிய முதலாளிகளும் தரகு முதலாளிகளும்)

மேற்படி மேற்கோளில் பாசிசத்திற்கு எதிரான ஐக்கிய முன்னணி சுட்ட வேண்டும் என்று தீட்சித் குறிப்பிடுகிறார். அந்த ஐக்கிய முன்னணியில் தேசிய முதலாளி வர்க்கப் பிரிவான (ஆர்.எஸ்.எஸ்) பா.ஜ.க. இடம் பெற வேண்டும் என வலியுறுத்துகிறார். அதை முன்னின்று இடதுசாரிகள் செய்வது வரலாற்றுக் கடமை எனவும் கூட காட்ட முயற்சிக்கிறார்.

இந்தக் கடமையை நாம் ஏற்கும் முன் 'பாசிசம்' என்பது குறித்து அறிய வேண்டியுள்ளது.

பொதுவாக பாசிசம் என்பது ஜெர்மனியிலும், இத்தாலியிலும் தோன்றியது. அதன் வர்க்க வேர் என்ன என்று பார்த்தால் குறிப்பாக கிராம்சி சொன்னதே ஏற்புடையதாக உள்ளது. அதாவது முதலாளி வர்க்கமும், பாட்டாளி வர்க்கமும் இடைவிடாது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சூழலில் இரண்டிற்கும் இடைப்பட்ட வர்க்கமான குட்டி முதலாளி வர்க்கமானது (சாதி, மதம் இனம் பூர்வீக இனவாதம்) முதலாளிய சமுதாயத்துக்கு முற்பட்ட கருத்தியில் வடிவங்களைக் கையில் எடுத்துக் கொண்டு போராடுகிறது. மக்கள் திரள் மத்தியில் செல்வாக்கும் பெறுகிறது; ஆட்சியில் அமருகிறது. ஆனால் ஆட்சியில் அமர்ந்தவுடன் தான்சார்ந்த வர்க்க நலனைக் கைவிட்டுப் பெருமுதலாளி வர்க்க நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தம் நிலையை அடைகிறது.

எனவே ஒருபுறம் பாசிசக்கட்சி தோன்ற முதலாளித்துவ சமுதாயப் பொருளாதார நெருக்கடி காரணமாகிறது; மறுபுறம் முதலாளிய சமுதாயத்தில் தோன்றும் பொருளாதார நெருக்கடியைப் பாட்டாளிவர்க்கத் தலைமையில் புரட்சியாக மாற்றுவதற்கான திறனின்மையும் காரணமாகிறது. ஆகவே தான் குட்டி முதலாளி வர்க்கக் கட்சி வளர்ச்சி பெற்று ஆட்சியை பிடிப்பது நிகழ்ந்து விடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



...யாவில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் இல்லை. மேலும், பாசிசம் என்பதும் ... நாடுகளிலும் தோன்றுவதற்கான நிலைமையே உள்ளது.

... கண்ணோட்டப்படி பார்த்தால் அதுவும் இந்தியச் சூழலில் பா.ஜ.க. பாசிச கட்சியே என்பது தெளிவாகும்.

அதாவது பா.ஜ.க. 1995-க்கு முன்பு வரை 2 எம்.பிக்களை கொண்ட சிறுகட்சி. முதலாளி வர்க்கத்தாரிடையேயான முரண்பாடு காரணமாக பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சி உடைகிறது. அதே நேரத்தில் பா.ஜ.க. இந்து மதவாதத்தை முன்னிறுத்துகிறது. எனவே அடுத்தடுத்த தேர்தலில் மிகப்பெரிய செல்வாக்குப் பெற்ற கட்சியாக வடிவெடுக்கிறது. ஆட்சியில் அமரும் முன் அக்கட்சி சிறுமுதலாளி வர்க்கப்பிரிவை பிரதிநிதித்துவம் (கைவினைஞர்கள், சிறுவிவசாயிகள் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர்) செய்தது. ஆனால் ஆட்சியில் அமர்ந்தவுடன் ஏகபோக முதலாளி வர்க்கம், தரகு முதரலாளி வர்க்க நலன்காக்கும் கட்சியாகிப் போனதை நிதர்சனமாக எதார்த்தத்தில் காண்கிறோம்.

மேலும் இங்... வும் ஒரு விசயம் காணத்தக்கது. அதாவது பா.ஜ.க. பேசிய சுதேசிக் கொள்... வைத்தே தீட்சித் தேசிய முதலாளி வர்க்கப் பிரிவாகக் காட்டுகிறார். ஆனால் அவரால் நடைமுறையில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சியாகக் காட்ட முடியவில்லை. அதற்கு ஒருவேளை பாட்டாளி வர்க்கக் கட்சி வலிமையாக இருந்தால் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கட்சியாக முன் நிறுத்தமுடியும் என அவர் சொல்லக்கூடும். அதற்கு நாம் அளிக்கும் பதில் இது தான். பாட்டாளி வர்க்கக் கட்சி வலிமையான சக்தியாக நிகழ்காலத்தில் இல்லாமல் போனதற்கு காரணம் தேசிய முதலாளித்துவம் பா.ஜ.க.வை வளரமுடியும். தேசிய முதலாளி வர்க்க கட்சி என்று கருதியது தான் என ஏன் கருதக் கூடாது?

மேலும் பாசிசச் சக்தியாக - குட்டி முதலாளி வர்க்க சர்வாதிகார கட்சியாக இருப்பது பா.ஜ.க. தானே! அதை எதிர்த்து அதனுடன் எவ்வாறு ஐக்கிய முன்னணி கட்டமுடியும்? அவ்வாறு ஐக்கிய முன்னணி கட்டினால் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணியைச் செய்ய இயலுமா? அது எப்படிப் புதியசன நாயகப் புரட்சியை நோக்கிச் செயல்படுவது ஆகும்.

இதெல்லாம் கணக்கில் கொண்டு பார்த்தால் பா.ஜ.க. தேசிய முதலாளித்துவக் கட்சி என்பது வலிந்து புனைந்த கருத்தே ஆகும். மேலும், ஒருவாதத்திற்கு தேசிய முதலாளியக் கட்சிதான் என்றால் பிராந்தியக் கட்சிகளையும் (மாநில) தேசிய முதலாளியக் கட்சியாகவே கருத வேண்டி வரும். அப்படியொரு கருத்து முன்வைக்கப்படுமாயின் நாம் முன்வைக்கும் கேள்வி. இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத தரகு முதலாளியத்துவ கட்சியாக முதன்மையாக உருப்பெற்றது தென்னிந்தியாவில் நீதிகட்சி ஆகும். இந்த நீதிக்கட்சி பிரிட்டானியருக்கு எதிராக செயல்படவில்லை. ஆனால் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டது. அதே நேரத்தில் பிரிட்டானியருக்கு கீழ்பட்ட தரகு முதலாளித்துவ கட்சியாகத்தானே நீதிக்கட்சியை காணமுடியும். அதன் தொடர்ச்சியாகத்தானே இன்றைய திராவிடக் கட்சிகள் இருக்கின்றன. எனவே பிராந்திய கட்சிகளையும் தேசிய முதலாளித்துவ கட்சிகளாக கருத முடியாது.

ஜே.பி. தீட்சித் கண்ணோட்டம் முரண்பாடையது என்பது தெளிவாகிறது. இந்த முரண்பாடுடைய கண்ணோட்டத்தை எந்த விமர்சனமும் இல்லாமல் தோழர் பால்ராஜ் (விஞ்ஞான சோசலிசக் கழகம்) எப்படி ஏற்றுக் கொண்டார்? ஜே.பி. தீட்சித் கட்டுரைகளை எந்தவித விமர்சன குறிப்பும் இன்றி வெளியிட்டார் என்பது இன்றும் விளங்காத புதிராகவே இருக்கிறது.

★ ★ ★

படிப்பகம்

www.padippakam.com



# தாராள மயமாக்கலும் புதியசனநாயகப் புரட்சியும்

ஏகபோக முதலாளி வர்க்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கை என்பது முன்னாள் குடியேற்ற நாடுகளில் நிலவுடைமை உற்பத்தியையும், அரசு முதலாளிய உற்பத்தியையும் அழித்து முதலாளிய உற்பத்தியைக் கொண்டு வருவதாகும். எனவே தான் இது உலக முதலாளியப் புரட்சி என அழைக்கிறோம்.

மேலும் புதிய பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்தும் முதலாளியத்தை - குறிப்பாக சொன்னால், ஏகாதிபத்தியம் எனச் சொல்ல இயலாது. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதியில் சந்தையைப் பங்கீடுவது என்பது ராணுவ வலிமை, நிதிமூலதன மேலாதிக்கம் மூலமாக மட்டும் நடைபெறவில்லை. இன்னும் சொன்னால் 1985-க்கு பின் அந்நடைமுறை பொருந்தவே பொருந்தாது. அவ்விடத்தைத் தொழில் நுட்பம் பிடித்து விட்டது. தொழில் நுட்பம் - அறிவும் கூட வர்க்க மேலாதிக்கத்திற்கான கருவியாகி விட்டது. எனவே தொழில் நுட்ப முதலாளியம் என அழைப்பதே சரியானதாக இருக்கும். அது குறித்து விரிவாக வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

தொழில் நுட்ப முதலாளியம் முந்தைய கட்டமான ஏகாதிபத்தியக் கட்டத்திலி ருந்து வேறுபடுகிறது. அதாவது முன்னாள் குடியேற்ற நாடுகளில் உருவாக்கிய தரகு நிலவுடைமையை அழிப்பதாக உள்ளது. மேலும் முன்னாள் குடியேற்ற நாடுகளில் அரசுமுதலாளியத்தை தவிர்க்க இயலாமல் வளர்க்கவும் உடன்பட்ட தொழில்நுட்ப முதலாளியம் தற்போது அரசு முதலாளியத்தை அழிப்பதாகவும் உள்ளது. சுருக்கமாகச் சொன்னால், உலகில் எஞ்சியிருக்கும் தரகு நிலவுடைமை மற்றும் அரசு முதலாளியத்தை அழிப்பதே தற்கால தொழில் நுட்பமுதலாளியத்தின் முக்கிய பண்புக்கூறாகும்.

முன்னாள் குடியேற்ற நாடுகளில் செயல்படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கை சாரத்தில் தரகு முதலாளியத்தை மேலும் வளர்ப்பதாகும். இந்த தரகு முதலாளிய வளர்ச்சியும் கூட அந்நிய மூலதனத்தை இறக்குமதி செய்வதன் வாயிலாகவே நடந்தேறி வருகிறது. அதுதான் தொழில்நுட்ப முதலாளிய வர்க்கங்களுக்கு பாதுகாப்பனதும் எளிதான செயலும் ஆகும். இது ஐரோப்பாவில் முதலாளிய நிலவுடைமையை அழித்ததிலிருந்து வேறுபடுவது ஆகும்.

இந்த புதிய பொருளாதாரக் கொள்கையால் நாட்டிற்கு தேசத்திற்கு ஆபத்து என இடதுசாரி இயக்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இது வர்க்கக் கண்ணோட்டமற்ற பார்வை ஆகும். மேலும் இந்த எதிர்ப்புக் கண்ணோட்டம் பாட்டாளி வர்க்க நிலையிலிருந்து முன் எடுக்கப்படுவதாக இல்லை, மாறாக குட்டி முதலாளி வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து முன் வைக்கப்படுவதாகும். (இது குறித்து உறவு-ன் இதழ்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் விளக்கி வந்துள்ளோம். எனவே விரிவான விளக்கம் இங்கு தவிர்க்கப்படுகிறது)

மேலும் இக்கண்ணோட்டம் மூன்றாம் உலக நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது என்ற கற்பனையான முடிவிற்குப் பலத்த அடிகொடுத்துள்ளது. அதாவது சிறுஉடைமை வர்க்கம் தனது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏகாதிபத்தி யத்தை தொழில், நுட்ப முதலாளியத்தை எதிர்க்க வேண்டும் என்பதைத் தேவையற்றதாக்குகிறது. புதிய சனநாயகப் புரட்சியால் தான் வாழ்க்கை வளம் பெற முடியும் என்பதையும் கூட கற்பனையான திட்டமாக்கிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால் இன்றைய உலகில் தேசிய முதலாளியம் - தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது என்ற கண்ணோட்டத்திற்கு சந்தேகமற்ற வகையில் இல்லை என்பதை தெளிவாக்கிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே வளர்ந்து வரும் முதலாளிய வர்க்கம் தரகு முதலாளி வர்க்கமாகவே பரிணமிக்க முடியும். எனவே மூன்றாம் உலகநாடுகளில் சிறுஉடைமை வர்க்கம் தனது நலனைக் குறைந்த பட்சம் தற்கால நலனைத் தக்கவைப்பது அல்லது மேம்படுத்துவது என்பதற்காக முன்வைக்கப்படும். சுதேசிக் கொள்கை, தொழில்நுட்ப முதலாளிய எதிர்ப்பும் கூட தீவிரமானதல்ல; அழித்தொழிலுக்கும் நோக்கம் கொண்டதல்ல. மாறாக தனக்கு மேலும் சலுகை வேண்டும் என்றபடியான நோக்கத்தின் வெளிப்பாடாகும். எனவே இவ்வர்க்க எதிர்ப்பு சாரத்தில் குட்டிமுதலாளி வர்க்க குணாம்சம் கொண்டது. ஆகவே அதை தேசிய முதலாளி வர்க்க குணாம்சமாக எடுத்துக் கொள்ள முடியாது. தரகு முதலாளித்துவ - குட்டி முதலாளி வர்க்கக் குணாம்சம் என வகைப்படுத்துவதே சரியானதாகும்.

நமது இந்தக் கண்ணோட்டத்தையே உலகெங்கும் போராடிவரும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் நிரூபிப்பதாக உள்ளன. அப்போராட்டங்களுக்குத் தரகு முதலாளிய வர்க்கப் பின்னணி இருந்தபோதிலும் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. மாறாக அப்போராட்டங்களை ஆதரிப்பதும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து முன் எடுப்பதும் கூட அவசியமானதே.

இதெல்லாம் கணக்கில் கொண்டால் தேசிய முதலாளியம், தேசிய முதலாளி வர்க்கம் உருவாவதற்கான பொருளாதார நிலைமையே இல்லை. எனவே அவ்வர்க்கம் பங்கெடுக்கும் இடதுசாரிகள் தலைமையிலான புதிய சனநாயகப் புரட்சி என்பது சாத்தியமே இல்லை. இந்த தெளிந்த முடிவிற்கு 1985-க்கு முன்பு ஒரு வாதத்திற்கு நியாயம் இருந்தது என்றாலும் இன்று எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. இதற்கு மாறாக புதிய சனநாயகப் புரட்சி சாத்தியம் எனச் சொன்னால் இல்லாத ஊருக்கு போக இயலாத பாதையைக் காட்டுவதாகவே இருக்கும்.

புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதன் வாயிலாக மூன்றாம் உலக நாடுகளில் அனைத்து தரப்பு வர்க்கப்பிரிவுகளிலும் பிர்வீனிய போராட்டம் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உக்கிரமடைந்துள்ளது. தன்னைக் காத்துக் கொள்ள ஒவ்வொரு வர்க்கப் பிரிவும் சாதி, மத, இன, பூர்வீக இனவாத அடிப்படையிலான சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டு களத்தில் இறங்கிப் போராடுவது இயல்பாகி உள்ளது.

தாராளமயம், தனியார் மயம் காரணமாக எண்ணிக்கையில் அதிகமாக பாட்டாளி வர்க்கம் தோற்றம் பெறுவது விரைவில் நடந்தேறும். அதன் விளைவாக பாட்டாளி வர்க்கத்தலைமையிலான போராட்டம் - சோசலிசப் புரட்சி நடைபெறுவதாக இருக்கும். நடப்பிலுள்ள இடதுசாரி இயக்கங்கள் சாரத்தில் குட்டி முதலாளியத் தன்மை கொண்டதன் காரணமாகவே சி.பி.ஐ. (எம்.எல்) குழுக்கள் அதன் இடது தீவிரவாத - சித்தாந்த வழிகாட்டு நெறி காரணமாக செயலற்ற நிலைமைக்கு சீனா தந்து வருகிறது. சி.பி.ஐ. (ஐ) சி.பி.ஐ (எம்) ஆளும் வர்க்க கண்ணோட்டம் கொண்ட தீவிர வலது சந்தர்ப்பவாத கட்சியாகவே மாறிவருகிறது. இதன் வெளிப்பாடாகவே சி.பி.ஐ. (எம்) திருவனந்தபுரத்தில் நடந்த சிறப்பு மாநாட்டில் அன்னிய முதலிட்டை எதிர்க்கவில்லை வரவேற்கிறோம்... என தீர்மானம் கொண்டு வந்தது காணத்தக்கது.

ஆகவே தான் சொல்கிறோம். தற்போது ஆளும் வர்க்கம் கடைப்பிடித்து வரும் கொள்கை காரணமாக பாட்டாளி வர்க்கம் தோன்றும். அவ்வர்க்கத்தின் பிரதிநிதியாக புதிய இடதுசாரி இயக்கம் தோன்றும். விரைவில்... நமது பங்களிப்புடன்...

படிப்பகம்

www.padippakam.com



## நீங்கள் எங்களுக்கு

சமுதாய மாற்றத்துக்கான ஆழ்ந்த சிந்தனைகளை வெளியிட்டு வருகிறீர்கள். இதழ் 9-ல் 'தனியார் மயமாக்கல்' மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்காது; பொதுத்துறை நிறுவனங்கள் சீரான செயல்பாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை புரியும் என்பதை வலியுறுத்தி கட்டுரை சிந்தனைத் தெளிவுடன் எழுதப்பட்டிருக்கிறது. வரலாற்று நிகழ்வுகளை மதிப்பிட்டு உண்மைகளை சுட்டிக் காட்டியிருப்பது பயனுள்ள பணியாகும். மார்க்சியக் கண்ணோட்டத்தை வளர்த்து சமுதாய மாற்றத்துக்கு வழிகாண முயலும் உங்கள் பணி போற்றுதலுக்குரியது. வாழ்த்துக்கள்.

**வல்லிக்கண்ணன்**

சென்னை, 2-5-2000

● ● ●

தொடர்ந்து உறவு-ன் பணிகள் வளர்ச்சி பெற்று உழைக்கும் மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்திடப் பாடுபடுவோம்.

இதழ் எண்-9-ல் வெளிவந்துள்ள தனியார் மயமாக்கல் புதிய பார்வை என்ற தலைப்பிட்ட கட்டுரையில் பக்கம் 16-ல் 4-ம் பகுதியில் உள்ள தனியார் மயமாக்கலை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்ற பாகத்திலிருந்து நாங்கள் பல முக்கியத்துவம் உடைய செய்திகளை அறியமுடிந்தது. மேலும் பக்கம் 21-ல் வெளியிட்டுள்ள முதன்மையான முழக்கங்கள் ஐந்திலும் உள்ள நோக்கம் சிறந்தவையாகும். 'உறவு' இதழ் மக்களாட்சி அதிகாரத்தை வென்றெடுக்கும் (Peoples Empowerment) களப்பணிக்கு முன்னோடியாக இருப்பதற்கு எமது தோழமை வாழ்த்துக்கள்.

**தொழிலாளர் ஒற்றுமை இயக்கம்.**

கோவில்பட்டி, 29-5-2000.

● ● ●

**தி. ரங்கசாமி**
**சனிக்கிழமை 22-7-2000**

திரு. கா.சே. பாலசுப்பிரமணியன்
6/5 கீழக்கொரட்டியார் தெரு,
காரைக்குடி - 630 001.

**அன்புடையீர், வணக்கம்.**

உறவு இதழ் 10 - ஜூலை கிடைக்கப் பெற்றேன் நன்றி. சென்ற ஆண்டு ஜூலை மாதம் தங்களுக்கு வந்த கடிதத்தை இப்போது பதிவு செய்திருக்கிறீர்கள்! சென்ற ஆண்டு பிப்ரவரியில் சிலப்பதிகாரம் எழுப்பிய பிரச்சனைகளுக்கு காலங் கடந்து பதில் எழுதியிருக்கிறீர்கள்!

இப்போது எனக்கொரு ஐயம். முதலாளிய சக்திகள் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனங்களை ஆய்வு செய்து தனது பலத்தை வலுப்படுத்திக் கொண்டே வருகின்றன. பூதாகாரமான அந்தச் சக்தி, சமுதாயத்தில் தனக்குச் சேவகம் செய்யும் அடிமைகளையும் அரசியலையும் "திறம்பட" வளர்த்துக் கொண்டிருக்கிறது. அதனை எதிர்த்து முறியடிக்க வேண்டிய சக்திகள் தமக்குள்ளே கருத்துப் பரிமாற்றம் என்ற பெயரில் செயலுக்கு வழிகாட்டாத தர்க்கத்தில் ஈடுபட்டுக் காலத்தை விரயம் செய்து வருகின்றன. எதிரிகளின் அநியாயத்தைச் சகித்துக் கொண்டு வாழத் துணை நிற்கிறோம். கருத்து வேறுபாடுகளைக் களைந்த பிறகுதான் ஒற்றுமை ஏற்பட்டு அதற்குப் பிறகுதான் இறுதிப்போர் தொடங்க வேண்டுமென்று கருதிச் செயல்படுவதாகவே நான் கருதுகிறேன். மார்க்சீயச் சிந்தனைகளின் மீதான விவாதங்களைத் தொடர்வதாக எண்ணிக் கொண்டு, மார்க்சீயத்தை நம்பிச் செயல்படுகின்றவர்களை விமர்சித்துக் குறைகளையே சுட்டிக்

www.padippakam.com



கொண்டிருப்பதனால் செய்ய வேண்டிய வேலைகள் தடைப்படுவ்து மட்டுமல்லாமல், மார்க்சீயத்தை ஏற்க மக்கள் பயப்படுகின்ற முறையில் விமர்சனத்தை விரிவுபடுத்தி வருவதன்மூலம் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக நான் கருதுகிறேன். "வேர் நனையத் தண்ணீர் விடவேண்டும்" என்பதற்காக வேரைப் பிடுங்கி"தண்ணீரில் நனைந்திருக்கிறதா" என்று தினசரி பறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது போல பல குழுக்களை ஏற்படுத்தி அதற்கு நாமும் உடந்தையாக இருக்கிறோம் என்று கருதுகிறேன். ஒவ்வொரு குழுவும் அந்த குழுவின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கில் "நண்டுப்பிடி" போடுவதைக் காண்கிறோம். இது தேவைதானா? என்பது எனது சந்தேகம். இன்னொரு பெரிய சந்தேகம். காலம் காலமாகக் காங்கிரஸை எதிர்த்து வந்த பிறகு விளைவு என்ன என்று பார்க்கும் போது பிஜேபி ஆட்சியில் அமர்த்தப்பட்டு உள்ளது தெரிகிறது. சோஷலிசம் என்ற எண்ணுகின்ற நிலை உருவாகியுள்ளது. ஒழிப்பதில் கவனம் செலுத்துகின்ற நாம் எதை வளர்க்கிறோம்? ஏன் வளர்க்கிறோம்.

அன்பன்

**தி. ரங்கசாமி**

● ● ●

## கருத்துப் போராட்டம் தேவையா!

**அன்புதோழரே!**

தங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி விபரம் அறிந்தேன். உடன் கடிதம் எழுத முடியவில்லை. மன்னிக்கவும். தங்களது கடிதத்தில் முன்வைக்கப்படும் சந்தேகங்கள் கேள்விகள் நியாயமானவை; அவற்றைப்பற்றி மனந்திறந்த விளக்கம் எழுதுவது எமது கடமையாக கருதுகிறேன்.

(அ) புரட்சிகர அமைப்புக்கள் - புரட்சியாளர்கள் தங்களுக்குள்ள வேற்றுமைகளைப் பற்றி மட்டுமே (குறிப்பாக உறவு-ஐ குறிக்கிறது) விமர்சனம் செய்வது சரியா என்றால் அது தான் முதல்பணி என மறுபடியும் சொல்வோம். காரணம், எல்லா இயக்கங்களை விட சமூக இயக்கம் என்பது சிக்கலானது; உணர்வு பூர்மானது. ஏனென்றால் "சரியாகச் செயல்பட சரியாக சிந்திப்பது அவசியமாகும்".

பொதுவாகவே பொருள்களின் இயக்கத்தில் ஒத்த மின்னூட்டங்கள் தனித்தனியாக இருக்கும் போது ஒன்றையொன்று விலக்கும். மிகப்பெரும் புறவிசையே அவற்றை நெருக்கி ஒன்றுபடுத்தும் இந்த அளவுகோல் புரசியாளர் ஒற்றுமைக்கும் பொருந்தும்.

எனவே கருத்துக்கள் பரிமாற்றம் - விவாதம் தேவையில்லாதது என கருதமுடியாது. அவசியமானதே. ஒவ்வொருவரின் உணர்வுகளையும் முறையாக எடுத்துக் கொண்டு அலசி ஆராய்வதே சமூக விஞ்ஞானமாகும்.

முரண்பட்ட நிலையில் ஒவ்வொருவரும் செயலுக்கு இறங்கும் போது தேவையில்லாத குழப்பங்கள் ஏற்படும். ஒருவருக்கொருவர் அவதூறுகளை அள்ளி வீச ஏதுவாகும். ஒரு தேரைப் பலர் இழுப்பதாகக் கொள்வோம். பலரும் பலமுனைகளில் கயிறு கட்டி இழுத்தால் தேர் இருப்பிலிருந்து சிறிது கூட நகராது. இதற்கு மாறாக, ஒன்றுபட்டு ஒரே திசைநோக்கி இழுத்தால் மட்டுமே நகரும் அது போலவே தான் புரட்சியாளர் ஒற்றுமையும் நடைமுறையும் எனவே புரட்சியாளர் ஒற்றுமை என்பது சலிப்பூட்டும் வாதப் பிரதிவாதங்களின் மூலமே ஏற்பட முடியும். இதற்குக் குறைந்த காலமே தேவைப்படும். இயங்கியல் மற்றும் தர்க்கவியல் துணையை முறையாக கையாளவில்லையெனில் ஒருபோதும் அதை நோக்கி நகர முடியாது. காலம்தான் வீணாகும். எனவே தான் தத்துவம் பயில்வதற்கு அதிக அழுத்தம் கொடுக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் பொதுவுடைமை இயக்கங்கள் வாதப் பிரதிவாதங்களைக் கணக்கில் எடுப்பதில்லை; அலட்சியமே காட்டி வருகின்றன. இத்தகைய சூழலில் விவாதத்தின் முக்கியத்துவம் குறித்து எத்தனை தடவை சொன்னாலும் தகும்.

எனவே நாம் ஒருவருகொருவர் குறைகளை சுட்டிக் காட்டுவதாக எடுத்துக் கொள்ளாது. ஆமை வேகத்தில் சென்றாலும் ஆரோக்கியமாக செல்ல வழி பிறந்துள்ளது என்றே கருதவேண்டும். (என்றபோதிலும், ஆமை வேகம் என்பதும் நிரந்தரமானது அல்ல. குறிப்பிட்ட காலத்தில் பாய்ச்சலாகவே வெளிப்படும். இதையே அளவு பண்பாக மாறும் என்ற இயங்கியல் விதி மெய்ப்பிக்கிறது. இதற்கு மாறாக ஆமை வேகத்தில் சென்றால் எவ்வாறு இலட்சியத்தை அடையமுடியும் எனக் கேட்பது எந்திரவியலான பார்வையாகும். மேலும், இது குறித்து விரிவான கட்டுரை உறவில் வரும். தற்போது இது போதுமே.

(ஆ) வரலாறு என்பது இருவேறுபட்ட சித்தங்களுக்கு இடையேயான போராட்டம் அல்ல. இதையே பா.ஜ.க. வளர்ச்சி எடுத்துக் காட்டுகிறது. அதாவது இரு சித்தங்கள் போராடும் சூழலில் மூன்றாவதான சித்தமும் கூட போராட வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. பா.ஜ.க. அசுர வளர்ச்சியை வர்க்க ரீதியாகச் சொல்வோம்.

1985 வரை காங்கிரஸ் பெரிய கட்சியாக இருந்தது. உலக அளவில் அரசு முதலாளியம் வீழ்ச்சி அடைந்தது. அதன் எதிரொலி இந்தியாவிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் பிரதிபலித்தது. இதையே வி.பி.சிங் ராஜீவ் மோதல் தெளிவு படுத்துகிறது. விளைவு கொஞ்சம் கொஞ்சமாக மதவாத அடிப்படையான பா.ஜ.க. வளர்ச்சி பெற்றது.

பா.ஜ.க. ஆட்சியில் அமரும் காலத்திற்கு முன்வரை அது கைவினைஞர்கள், கிராமப்புற நடத்தர வர்க்கத்தினர், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் நலனையே பிரதிநித்துவம் செய்தது. சுருக்கமாகச் சொன்னால், குட்டி முதலாளி வர்க்க அடிப்படை கொண்டது. ஆனால் ஆட்சியில் அமர்ந்தது முதல் படிப்படியாக பெரும் முதலாளி வர்க்கத்தின் கட்சியாக மாறியது கவனம் கொள்ளத்தக்கது. இவ்வளர்ச்சிக்கு மதம் ஒரு கருவியாகவே பயன்பட்டது.

இந்த குட்டி முதலாளி வர்க்க சக்திவளர்ச்சி பெறக் காரணம். இடதுசாரி இயக்கங்கள் பாட்டாளி, விவசாயி வர்க்க நலன் குறித்து பேசினாலும் அவ்வர்க்கங்களின் மொத்த நலனை ஒருபோதும் பிரதிநித்துவம் செய்ய முடியவில்லை. ஆனால் கற்பனாவதாம் நிறைந்ததாக இருந்தது. இதன் விளைவாக இடதுசாரி இயக்கங்கள் எதிரியாக இருந்த காங்கிரஸ் பலவீனமடைந்தது. பா.ஜ.க. வளர்ச்சி பெற்றது. எனவே காங்கிரஸ் எதிர்ப்பைக் குறைந்து இடதுசாரி இயக்கங்கள் பா.ஜ.க. எதிர்ப்பை அதிர்க்க வேண்டியதாகியது. குறிப்பாக CPI; (POM) காங்கிரசுடன் கூட்டுச்சேர நிபந்தனையுடன் வேண்டியதாகியது.

இது எதைக் காட்டுகிறது. வரலாற்றில் தற்செயல் நிகழ்ச்சியாக பா.ஜ.க. வளர்ச்சி பெற்ற தன் மூலம் வரலாற்றின் போக்கைப் புரிந்து கொள்வதில் பின்தாங்கி விட்டதையே காட்டுகிறது. அதாவது மார்க்சியத்தின் வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகு முறையைப் புரிந்து கொள்ளதாது தான் காரணம் எனச் சொல்ல முடியும்.

இங்கு இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

தோழமையுடன்

**கா. சே. பாலசுப்பிரமணியன்,**

23/8/2000

● ● ●

படிப்பகம்

www.padippakam.com



**தோழர் பாலாவுக்கு வணக்கம்.** உறவு 10-வது இதழ் கிடைத்தது. தயாரிப்பில் பிழையாக அட்டை தவிர 11 முதல் 20 பக்கம் வரைதான் இருந்தன. 3 to 10 வரையிலான பக்கங்கள் இல்லை. 11-வது பக்கத்தின் முதல் 5 வரிகளில் தங்களின் கடிதமொன்றின் இறுதி வரிகளில் சங்கராச்சரி நிலவுடைமையாளனாகவும் பங்காரு அடிகாளரை முதலாளியாகவும் (அல்லது மேற்கண்ட இசங்களின் குறியீட்டுப் பிரதிநிதிகளாகவும்) விளக்கியிருந்தீர்கள். இவ்வாறு கூறுமளவுக்குரிய முந்தைய பக்க விளக்கங்கள் கிடைத்தால் நல்லது. எனினும் கூட இந்த அளவுக்கு வறிய சிந்தனை உங்களுக்கு எப்படிவந்தது என்பது எனக்கு விளங்கவில்லை. ஏனென்றால் எங்களைப் போன்றவர்களையெல்லாம் விட மார்க்சிய மூலவர்களின் நூல்களை அதிகம் படிப்பவர் நீங்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! பங்காரு அடிகளார் முதலாளித்துவப் பிரதிநிதி என்றால் பிரேமானந்தா யார்? ஏகாதிபத்தியத்தினுடைய பிரதிநிதியா?

பிராமணர்களின் கூடாரமாக மட்டுமே இருக்கிற சங்கரமடத்தை அதன் உள்ளீடாக இயங்குகிற இந்துத்துவத்தை பங்காரு பிற சாதியினருக்குமாக விரிவு செய்கிறார். இதை நாம் நிலப்பிரபுத்துவப் புனரமைப்பு என்று சொல்கிறோம். ஏனென்றால் சங்கரமடத்தில் பேணப்படுகிற அதே வழிபாட்டத்தன்மையும், கருத்து முதல் வாதமும்தான் சக்தி பிடத்திலும் பேணப்படுகிறது. நீங்கள் சொல்கிறதைப் பார்க்கும்போது ஏற்கனவே நான் முதலாளியத்துவம் என்றால் என்ன என்பது பற்றிப் படித்ததெல்லாம் மறந்துபோய் விடும்போல் இருக்கிறது.

"எனவே முதலாளி வர்க்கம், சாதி, மதம், கடவுள் மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என்பது நமது கற்பனாவாதமான விருப்பமே என அறிக!" என்று முத்தான இரண்டு வரிகளை எழுதியிருந்தீர்கள். மேற்கண்ட பொதுவுடமைச் சமூகத்துக்கு முரணான அம்சங்களை தகர்த்தெறிய வேண்டுமென்பதில் நம்பிக்கையோடுதான் இந்தியாவில் முற்போக்கு இயக்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதெல்லாம் நடக்காது - கற்பனாவாதம் என்று நீங்கள் கொள்வதாக இருந்தால் உறவு பத்திரிகை எதற்காக வெளியிடப்படுகிறது என்பதையும், மா-லெ இயக்கங்கள் ஒன்றிணைவது குறித்து தூக்கம் வராமல் புரண்டுபுரண்டு ஏன் நீங்கள் யோசிக்கிறீர்கள் என்பதையும் வாசகர்களுக்கு விளக்க வேண்டும்.

எஸ். சீனிவாசன் என்பவருக்குரிய உங்களின் பதிலில் (6)-வது பத்தியில் உறவு இதழின் அரசியல் தளத்தோடு அவர் உடன்படுவதாகவும் தற்போது அவர் இருக்கும் அமைப்பிலிருந்து விலகி உறவு முகாமுக்கு வரவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருந்தீர்கள். "கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை" என்று பழமொழிப் பிரயோகம் வேறு. மாற்று அமைப்புகளில் உள்ளவர்கள் உறவு பத்திரிகைக்கு எழுதிவரும் ஒன்றிரண்டு கடிதங்களைக் கூட தடுத்து நிறுத்தி விடுவீர்கள் போலிருக்கிறது.

மேலும் தி. சிலப்பதிகாரம் தன் கடிதத்தில் தான் ஒரு எந்திரவியல் பார்வை கொண்டவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். பிறகென்ன இந்தியாவில் இருந்துகொண்டு ஆலைத் தொழிலாளி - பாட்டாளி வர்க்கம் என்றெல்லாம் பிதற்றினால் என்ன செய்வது? சீனா, ரஷ்யாவின் திரிபுவாதங்களின் தோற்றம் குறித்துப்பேசுகிற தி. சிலப்பதிகாரம் இந்தியாவில் பாட்டாளிகள் என்பவர்கள் சாதிப் பாட்டாளிகளாக, மதப்பாட்டாளிகளாக இருப்பது பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கம் நல்ல உணவு உடை இருப்பிடத்தோடு இருக்கட்டும். இருக்கவேண்டும். ஆனால் இங்கே எல்லாரும் ஒரு சாதியைச் சுமந்துகொண்டு திரிகிறார்களே? சிலருக்கு அது கிரீடமாகவும், சிலருக்கு சுகமான சுமைகளாகவும்,

படிப்பகம்

www.padippakam.com



சிலருக்கு முள்வேலியாகவும் சூடப்பட்டுள்ளதே? இத்தகைய சமூக அமைப்பில் அவர்கள் ஒரே இடத்தில் பணிபுரிகிற ஆலைத்தொழிலாளர்களாகவே இருந்தாலும் கூட அவர்கள் எப்படி பாட்டாளி வர்க்கமாக ஐக்கியப்பட முடியும்?

தற்போதைய நமது இருப்பு நிலைகளிலிருந்து செய்யவேண்டிய வேலைகளிலி ருந்து தப்பித்துச் செல்லும் விதமாகவே பாட்டாளி வர்க்க சர்வதேசியம், ஏகாதிபத்திய சர்வதேசியம் போனற விஷயங்கள் உயர்த்திப் பிடிக்கப்படுகின்றன.

எக்ஸில் ஷோலியசக்திக்கு ஒரு வேண்டுகோள் என்னும் பெயரில் அ.மார்க்சின் மௌனம் பற்றி வருத்தம் தெரிவித்துள்ளீர்கள். இப்போதுதான் தெரிகிறது உறவு 2, 4, 6-வது இதழ்கள் அ. மார்க்சுக்காக தயாரிக்கப்பட்டது என்று. அவர் இடதுசாரி வட்டாரத்திலிருந்து தான் பதில்எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் இடை மறிக்கிறீர்கள். அப்படியென்றால் நீங்களும் இடதுசாரி முகாமைச் சேர்ந்தவர்தானா?

அ. மார்க்ஸ் போன்றவர்களின் கவன ஈர்ப்புத்தீர்மானமாக உறவை நடத்தாமல் சமூக எதார்த்தங்களில் நாள்தோறும் இடிபாடுகளினிடையே வாழும் மக்களுக்காக, அவர்களின் வலி மீதெழும்பும் குரல்களைப் பதிவுசெய்யும் விதமாக உறவு வெளிவந்தால் பயனுடையதாக இருக்கும்.

"தனியார் மயம் - சில திறனாய்வுக் குறிப்புகள்" குறித்து பின்னர் எழுதலாம்.

தோழமையுடன்...

**மேகவண்ணன்**

21 / 07 / 2000.

• • •

## பாட்டாளிவர்க்கம் இருக்கிறதா!

**அன்பு தோழருக்கு வணக்கங்கள்.**

தங்களது கடிதத்தின் முற்பகுதி உறவின் கண்ணோட்டத்தை புரிந்து கொள்ளாமல், படிக்காமல் எழுதப்பட்டுள்ளது. இது விமர்சன மரபுக்கு உகந்தது அல்ல. பொதுவாக விமர்சனம் என்பது சொல்லப்பட்ட விசயத்தை கணக்கில் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் தாங்கள் கடைசி நான்கு வரிக்கு முக்கியத்துவம் கொடுத்து விமர்சனம் தீட்டி உள்ளீர்கள். இதழில் தாங்கள் குறிப்பிட்ட தவறு எதார்த்தமாக நடந்தது தான். தாங்கள் அறியாததும் அல்ல.

(அ) நாம் ஒரு வார்த்தையை பயன்படுத்தும் போது கவனமாக பயன்படுத்த வேண்டி உள்ளது. முதலாவதாக அந்த வார்த்தை நடப்பிலுள்ள வழக்கத்திற்கு மாறான பொருளை - தருகிறதா? இல்லை முன்னர் வழக்கத்தில் இருந்தது தானா? புதிதாக பயன்படுத்தும் வார்த்தையைப் ஏன் பயன்படுத்த நேர்ந்தது எனவும் காண வேண்டும்.

மார்க்சியம் விஞ்ஞானங்களின் விஞ்ஞானம். எனவே மார்க்சிய விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் தங்களுக்கு போததாக உள்ளதா? அச்சொல் மரவு ரீதியான பொருளிலிருந்து எங்ஙனம் வேறுபடுகிறது விளக்கம் தேவை.

சமுதாய வரலாற்றை சாதிய வர்க்க கண்ணோட்டத்தில் தான் மார்க்சியம் அணுகுகிறது. இந்த நோக்கில் பார்த்தால் நிலவுடைமை, முதலாளித்துவம், சோசலிசம் அல்லது புதிய சனநாயகம் என்ற கட்டங்கள் தவிர்க்க இயலாதவை. அதேபோல் நிலவுடைமை வர்க்கம், முதலாளி வர்க்கம் சிறு, நடுத்தர விவசாயிகள், பாட்டாளிகள்... என்ற வர்க்கத் தோற்றங்களும் கூட அந்தந்த சமுதாய அமைப்புக்கு உரியவை.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் நிலவுடைமை வர்க்கம் அழிந்தால் - தோற்றமெடுப்பது முதலாளி வர்க்கம் அல்லது சிறுமுதலாளி அல்லது அதற்கும் கீழ்பட்ட பாட்டாளி வர்க்கம் என்று தான் கருதமுடியும். ஆனால் தாங்கள் "புனரமைப்பு" என்பது பொருத்தமாக தெரியவில்லை; சமுதாய வர்க்கங்களின் வாழ்நிலை மாற்றத்தை வெளிப்படுத்துவதாகவும் இல்லை.

மேலும் தங்கள் கண்ணோட்டம் சமுதாய வர்க்கங்களின் வாழ்நிலையில் மாற்றங்கள் நடக்கிறது என்பதில் அதுவும் உறவு-ன் கண்ணோட்டத்தில் உடன்படுகிறது. அதேநேரத்தில் பெயர்வைப்பதில் மட்டும் தான் உறவும் நீங்களும் வேறுபடுவதாகக் கருதலாம்.

உறவு முன்வைக்கும் கண்ணோட்டமும் சொற்களும் ஆழ்ந்த பரிசீலனையின் மூலம் வந்தடைந்தவையாகும். பொறுப்பின்றி - சமூக உணர்வின்றி - சொல்லப்பட்டது அல்ல.

மேலும் உறவு-ன் கண்ணோட்டம் முதலாளியம் குறித்து குழப்பத்தை உண்டாக்குவதாக குற்றமும் சுமத்துகிறீர்கள். தோழரே! உறவு முன்வைக்கும் விளக்கங்கள் ஆசான்களின் விளக்கங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? விளக்கினால் நன்று. இதற்கு தாங்கள் ஆசான்களின் வழிமுறையிலிருந்து தொடர்வீர்கள் என நம்புகிறேன். இதற்கு மாறாக இன்றைய தலைவர்களின் விளக்கங்கள் - மற்றும் நான் உட்பட கூறும் விளக்கங்களை அப்படியே எடுத்துக் கொள்வதும் கூட சரியானதல்ல. சுயச்சிந்தனையை வளர்ப்பதும் அல்ல. எனவே தான் கண்ணோட்டம் - ஆசான்களின் வழிமுறையிலிருந்து திசைவிலகியது என்று காட்டினால் ஏற்கத்தயார்.

(ஆ) வரலாற்றில் முதலாளி வர்க்கம் தனக்குக் கீழ்பட்ட வர்க்கங்களை தன்பால் ஈர்த்துக் கொள்ளவே மதம் - மூடநம்பிக்கைகளை எதிர்த்தது; ஆனால் அதுகாலப் போக்கில் தனக்கு எதிரான பாட்டாளி வர்க்க எழுச்சிக்குத் தூண்டு விசையாக மாறியது. எனவே தான் உலகெங்கும் தோன்றிய - தோன்றுகிற முதலாளி வர்க்கங்கள் மதம் - மூடநம்பிக்கை எதிர்ப்பைக் கைவிட நேர்ந்தது. அதேநேரத்தில் தனது நலனுக்கு கீழ்பட்ட விதத்தில் சாதி, மதம் போன்றவற்றில் முதலாளி வர்க்கங்கள் சிறுசிறு மாற்றங்களைக் கொண்டு வருகிறது. எனவே தான் நாம் எழுதினோம். "முதலாளி வர்க்கம் சாதி, மதம், மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் நமது கற்பனாவாதமான விருப்பமே என அறிக" என எழுத நேர்ந்தது.

உறவு சாதி, மதம், மூடநம்பிக்கைகளை பாதுகாக்க வேண்டும் என கருதவில்லை; அதற்காக இதழ் நடத்தவும் இல்லை; இடது சாரி இயக்கங்களின் நோக்கம் என்னவோ அதுதான் உறவுன் நோக்கமும்.

அதேநேரத்தில் சமுதாய வர்க்கங்களின் வாழ்நிலையில் மாற்றம் பண்பளவில் நடைபெறுவதை இடதுசாரி இயக்கங்கள் கணக்கில் எடுக்காமல் பழைய திட்டவழிப்பட்டே செயல்படுகின்றனர். இதற்கு மாறாக உறவு புதிய திட்டவழிபட்ட செயல்பாட்டுக்காக போராடுகிறது. அதில் உறுதியாகவும் இருக்கிறது. மா-லெ இயக்கங்கள் ஒன்றிணைவது - அதாவது பழைய திட்ட அடிப்படையில் - நடக்க இயலாத ஒன்று. அதை யாரும் - இயக்கமும் செய்யமுடியாது என்று உறுதியாகச் சொல்கிறோம். ஆனால் சமுதாயப் புரட்சி - சோசலிசப் புரட்சி என நாம் சொல்லக் கூடும் - அதற்கான செயல்முறையில் தொடர்ந்து உறவு செயலாற்றும்.

(இ) தி. சிலப்பதிகாரத்தின் கடிதத்தில் காணப்படும் "...இந்தியாவில் பாட்டாளி" என்பது குறித்து கேள்வி எழுப்பியுள்ளது காணத்தக்கது.

சமுதாயத்திலுள்ள மக்கள் கிரளினை

படிப்பகம்

www.padippakam.com



[illegible] சரிதான். இதற்காக சாதிப்பாட்டாளி, மதப்பாட்டாளி என அடையாளப்படுத்துவது சரியாக இல்லை.

ஒவ்வொரு மனிதரும் ஒரு சாதியைச் சேர்ந்தவராக, ஒரு மதத்தைச் சேர்ந்தவனாக இருப்பது இயல்பே. மேலும் இந்தச் சாதி மத அம்சங்களுக்கு அடங்காத கூறுகளும் ஒவ்வொரு மனிதரிடமும் இருக்கின்றன, அதாவது சராம்சமாகப் பார்த்தால் வர்க்கமாக வரையறுக்க இயலும். பொதுவுடைமவாதிகள் வர்க்க உணர்வை வளர்ப்பதன் மூலம் சாதி மத உணர்வுகளைப் படிப்படியாக அழிப்பதற்கு வழிவகுக்கலாம். இதற்கு மாறாக வர்க்க உணர்வை வளர்க்கமுடியாது என்பது சரியல்ல.

மேலும் சாதி மத அடிப்படையிலேயே சமுதாய வரலாற்றை அணுக முடியும் என்றாகிவிடும். வர்க்கப் புரட்சி சாத்திய மற்றது எனக் கருத இடந்தருவது மட்டுமல்ல பின் நவீனத்துவவாதிகள் சொல்வதற்கும் மேலாக எதுவும் இல்லை என்றாகும். இது மார்க்சின் போதனையிலிருந்து திசைவிலகுவதாகும்.

[illegible] எஸ். சீனிவாசனுக்கு பதில் எழுதியது உறவு-ன் கண்ணோட்டத்தில் சரியே! அவ்வாறு எழுதாமல் போனால் மாற்று அமைப்பில் உள்ளவர்கள் தங்களது சுயசிந்தனையை ஊக்குவிக்காத தவறை செய்தவர்களாகவே மாறிவிடக்கூடும். எனவே தான் அவ்வாறு எழுத நேர்ந்தது. இது உடனடியாக இல்லாமல் போனாலும் எதிர்காலத்தில் மாற்றுக் கருத்துளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கான உந்து விசையாக அமையும் என்றே கருதுகிறோம்.

[illegible] மார்க்சுக்கு எதிராக மார்க்சிய கண்ணோட்டத்தில் வலுவான சரியான கருத்துக்களை கடந்த இரண்டு வருடமாக முன்வைத்து வருகிறது உறவு.

இடதுசாரிகள் எதார்த்த நிலைமைகளை சராம்சமாக புரிந்து கொண்டதைவிட [illegible] முறையில் பின்நவீனத்துவம் விளக்குகிறது. ஆனால் மார்க்சிய கண்ணோட்டத்திலிருந்து திசைவிலகலானது என்பதை நாம் குறிப்பிடாமல் இல்லை. [illegible] உட்பட இடதுசாரி இயக்கங்கள் எதார்த்த சமுதாயத்தைப் பற்றிய மார்க்சியக் கண்ணோட்டத்தை வளர்ப்பதிலிருந்து திசைவிலகிய தான் ஒட்டு மொத்த வெளிப்பாடாகவே பின்நவீனத்துவம் தோன்றியது என்றே கருதுகிறோம். இது குறித்து வரும் இதழில் விரிவான கட்டுரை வர உள்ளது.

மார்க்சியம் செயலுக்கு வழிகாட்டியே தவிர வறட்டுச்சூத்திரமல்ல; ஏனென்றால் ஆசான்களின் போதனையைக் காலச் சூழலுக்கு ஏற்ப வளர்த்தெடுத்து பயன்படுத்துவது குறித்த பொதுவான வழிமுறைகளை மட்டுமே வழங்குகிறது; மாறாக மதவாதிகளின் வேதப்புத்தங்களை போல எக்காலத்துக்குமான கொள்கை கோட்பாடுகளை வலியுறுத்தவில்லை. ஆனால் எதார்த்தத்தில் இடதுசாரிகளிடையே கருத்துப் பரிமாற்றம் இல்லாமல், ஒவ்வொருவரும் தத்தமது கருத்தே சரியானது [illegible]படுவது சமுதாயப்புரட்சியை முன் எடுக்கும் சொல்லாக எவ்வாறு [illegible] இயலும்?

நாம் உறுதியாகச் சொல்கிறோம் இடதுசாரிகள் - சி.பி.ஐ., சி.பி.ஐ (எம்) வலது சந்தர்ப்பவாதிகள். சி.பி.ஐ. (எம்-எல்) குழுக்கள் இடது தீவிர வாதமாகும். இவ்விரு போக்குகளுமே மார்க்சியம் அல்ல; மேலும் இது குறித்து உறவு - 3-ம் இதழ் பார்க்க. நடப்பிலுள்ள இடது சாரிகளின் கண்ணோட்டத்திலிருந்து உறவு வேறுபடுகிறது என்பதற்காக "புதிய இடதுகள்" என சொன்னால் கூட சொல்லிக் கொள்ளட்டும்!

புரட்சிகர வணக்கங்களுடன்

**கா. சே. பாலசுப்பிரமணியன்**

படிப்பகம்

www.padippakam.com



# உறவு வாசகர் வட்டம் ஒருங்கிணைக்கும்

# மார்க்சிய சிந்தனையாளர் மாநாட்டு மலர்

## படைப்புகள், விளம்பரம் நன்கொடை தாரீர்!

*தோழர்களே!*

மாநாட்டு மலர் ஆவணங்கள் தொகுக்கப்பட்டு மாநாட்டு அரங்கிலேயே வெளியிடப்படும் வகையில் 200 பக்க (1/8 டம்மி சைஸ்) மலர் தயாரிக்கப்பட்டு வருகிறது. மலர் விளம்பரக் கட்டணம் - முழு பக்கம் - ரூ. 500-00

உங்கள் படைப்புகள், விளம்பரம் நன்கொடையை உடன் மாநாட்டுக் குழு முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்

படிப்பகம்

www.padippakam.com



காரைக்குடி மாநகரில்

# மாபெரும் - மார்க்சிய சிந்தனையாளர் - மாநாடு

'உறவு' வாசகர் வட்டம் ஒருங்கிணைக்கிறது.

எல்லா சமூகப் பொருளாதார அமைப்புகளிலும் அதன் தேவைக்கும் நலனுக்கும் ஏற்ற தொழில்நுட்பம் நடைமுறையில் நிலவும். மறுபுறத்தில் புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்பு முந்தைய சமூக அமைப்பை மாற்றுவதற்கான காரணமாக அமையும். இவை மாறிமாறி நிகழ்வதும் இணையாகச் செல்லுவதுமான இரு கோடுகள்.

1898க்கு பிந்தைய காலகட்டத்தை மரணப்படுக்கையில் இருக்கும் முதலாளியம் அல்லது வல்லரசிய (Imperialism) காலம் என மாமேதை லெனின் வரையறுத்தார். அவரது கணிப்பின்படியே இரு உலகப் போர்கள் ஏற்பட்டு பெரும் விளைவுகள் ஏற்பட்டன. இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய பல்வேறு சமூக அனுசரனைச் (Social Adjustment Activities) செயல்பாடுகளின் தொடர் விளைவுகள் மார்க்சியர்களால் ஆழ்ந்த பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. அவற்றுள் குறிப்பிடத்தக்கது.

★ தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி.
★ தொழில்நுட்ப அறிவியல் புரட்சியென அழைக்கப்படும் தன்னியக்க (Automatic) இயந்திரங்களின் பெருக்கம்.
★ செல்லுயிரியல் கண்டுபிடிப்புகள்.
★ நாடுகளுக்கிடையிலான வேலை (உற்பத்தி வகை) பிரிவினையின் வளர்ச்சி.
★ புதிய வர்க்கங்களின் அணி சேர்க்கை.
★ ஐ.நா. அவை, உ.வ.க (W.T.O.) போன்ற (தனியார் மயம், தாராளமயம், உலகமயம்) உலகளாவிய அதிகார நிறுவனங்களின் மேலாண்மை.
★ அமெரிக்கா தலைமையிலான 'ஒற்றை உலக ஒழுங்கு'.
★ தேசிய இனப் போராட்டங்களின் புத்தெழுச்சி.
★ உலகளவிலான மதவாத முரண்பாடுகள்.
★ இந்தியாவில் சாதிய, மத முரண்பாடுகளின் புதிய போக்குகள்.
★ உலகளவிலான இடது சாரி இயக்கங்களின் பின்னடைவு.

இவற்றையும் இவையொத்த சிக்கல்கள் குறித்தும் அமைப்பு ரீதியிலான முறையிலன்றி பரந்த சனநாயக நோக்கிலான விவாதங்களை முன்னெடுக்கும் முயற்சியாக மேற்குறிப்பிட்ட மாநாடு நடைபெற உள்ளது.

சாவதேசிய அளவில் இயங்கும் பலதரப்பு அறிஞர்கள் பங்கேற்க உள்ள இம்மாநாட்டில் தங்களாலான அனைத்துவித உதவிகளையும் செய்ய தோழமையோடு வேண்டுகிறோம்.


<u>மாநாட்டுக் குழு தொடர்புக்கு :</u> கா.சே.பாலசுப்பிரமணியன்

6/5, கீழக்கொரட்டியார் தெரு, காரைக்குடி - 630 001

தொலைபேசி : 04565 - 436765 மின்னஞ்சல் : uravu@rediffmail.com


படிப்பகம்